**கலிகமுவ பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலிகமுவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 124,800 தொகை கணக்கீடு செய்யப்படாமையினால் ஆண்டின் மூலதனச் செலவினம், நூலகப் புத்தகங்கள் மற்றும் மூலதன வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நன்கொடையாக சபைக்கு கிடைத்த ரூபா 535,000 பெறுமதியான தண்ணீர் பவுசர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) காணிகளைக் கூறிட்டு விற்பனை செய்யும் போது பொதுச் செயற்பாடுகளுக்காக சபைக்குக் கையளிக்கப்பட்ட 15 ஏக்கர் 02 றூட் அளவிலான 08 காணிக் கூறுகள் நிலையான சொத்துப் பதிவேட்டிற்கும் கணக்குகளுக்கும் எடுக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கடன்பட்டோர் மற்றும் வேலைக் கடன்கொடுத்தோர் என்பன முறையே ரூபா 1,551,990 மற்றும் ரூபா 762,085 தொகைகள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 14,701,065 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 16,608,314 ஆகும்.

## 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 158(1) ஆம் பிரிவு | 361,492 | ஆதனவரி அல்லது ஏக்கர் வரி செலுத்தாமை தொடர்பாக அந்த வரி அறவிடுவதற்குள்ள இடத்தின் உரிமையாளரின் ஆதனங்களைத் தடைசெய்து விற்பனை செய்தேனும் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நீண்ட காலமாக வரி அறவிடப்படாது காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக வரி அறவிடுவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 1646 | - | சபையின் 15 வாகனங்களின் 2015 செப்தெம்பர் முதல் 2018 மே வரையான காலப்பகுதிக்குரிய ஓட்ட அட்டவணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,372,191 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,995,783 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,855,000 | 1,712,974 | 1,426,656 | 347,243 | 2,377,000 | 2,428,824 | 1,811,284 | 617,540 |
| வாடகை | 4,483,775 | 2,317,060 | 2,211,110 | 105,950 | 3,488,500 | 259,430 | 259,430 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 880,200 | 897,233 | 897,233 | - | 836,200 | 459,200 | 459,200 | - |
| ஏனைய வருமானம் | 14,556,000 | 15,502,332 | 6,226,038 | 9,276,294 | 15,492,000 | 64,075 | 64,075 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது வீதவரியும் வரியும், வாடகை வருமானம் மற்றும் ஏனைய வருமானம் முறையே 23 சதவீதம், 51 சதவீதம் மற்றும் 57 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் 2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்பட்ட 78 வியாபார நிறுவனங்களுக்காக 2017 நவம்பர் வரையிலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அனுமதிப்பத்திரம் பெறாத நிறுவனங்கள் சுற்றாடல் அதிகாரசபையின் நிபந்தனைகளுக்கு இணங்க வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றதா என உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 312,000 தொகையான வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வியாபார அனுமதிப்பத்திரம்**

மீளாய்வாண்டின் இறுதியில் 04 வியாபார நிலையங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 5,280 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச

சபை அதிகாரச்சட்டத்தின் 150(4) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

விற்பனை செய்யப்பட்ட காணிகளின் விற்பனைப் பெறுமதியில் ஒரு சதவீத வரியொன்று சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், விற்பனை செய்யப்பட்ட 03 காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் வரித்தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து விபரங்களைப் பெற்று நிர்ணயிக்கப்பட்ட வரித்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப்பிரதேசத்தில் மலக்கழிவுகளை அகற்றுவதற்காக பொருத்தமான இடமொன்று காணப்படாமையினால் கலிபவுசர் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்றறின்மைகள்

மீளாய்வாண்டில் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 107 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் கட்டிடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் நிர்மாணங்கள் இடம்பெற்றிருந்ததா எனவும் அவ்வாறில்லையாயின் அனுமதிப்பத்திரக் காலம் நீடிக்கப்பட்டிருந்ததா எனவும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்காக தரச் சான்றிதழ் பெறப்பட்டிருந்ததா எனவும் பின்னாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 2017 நவம்பர் 22 ஆந் திகதியில் காணப்பட்ட 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2013 யூன் முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த உழவு இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள்**

பதிவு உரித்து ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான எனினும் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 13 வாகனங்கள் காணப்பட்டன.

**3.5 பெறுகைகள்**

**வருடாந்த பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 24 செலவின விடயங்களுக்குரிய ரூபா 4,769,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு 100 சதவீதமும், 18 செலவின விடயங்களுக்குரிய ரூபா 4,995,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளில் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான அளவிலும் கூட்டுமொத்தமாக ரூபா 9,764,000 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படாமை |
| | | (ii) | நிலையான சொத்துப் பதிவேடு நாதுவரையாக்கப்படாமை |
| (ஆ) | உள்ளகக் கட்டுப்பாடு | | போதியளவான கணக்காய்வு இடம்பெறாமை |
| (இ) | கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | | மிகை / பற்றாக்குறை ஒதுக்கீடுகளை குறைக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்காமை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை ஆதனவரியை அறிவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | ஆதனவரி மதிப்பீடு நாளதுவரையாக்கப்படாமை |
| | | (iii) | ஏக்கர் வரி அறவிடப்படுகின்ற பிரதேசங்கள் தொடர்பாக மெய்மையாய்வு இடம்பெறாமை |
| | | (iv) | கடைகளுக்காக புதிய மதிப்பீடு 2015 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படாமை. |
| | | (v) | மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வருமானப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |